அனுபவ நாடி ஞான போதினி

(படங்களுடன்)

தாமரை நூலகம்,
சென்னை-26.

அனுபவ நாடி ஞான போதினி

(படங்களுடன்)

எழுதியவர்

டாக்டர் எஸ். சி. நம்பி

பதிப்பாசிரியர்

ஆர்.சி. மோகன்

தொலை பேசி எண் - 23620249

தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி,

வடபழனி, சென்னை - 600 026.

தாமரை வெளியீடு : எண்-147
முதல் பதிப்பு : 1922
இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 1995
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2003 ஏப்ரல் 2016
நான்காம்பதிப்பு : நவம்பர் 2021

நூலைப் பற்றி

நூலின் பெயர் : அனுபவ நாடி ஞானபோதினி

பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஒ. காலனி,
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : நவம்பர் 2021

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : கிரவுன் 1 x 8

தாளின் தன்மை : 10.6 வெள்ளைத்தாள்

அச்சு எழுத்து : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 68

பிரதிகள் : 1000.

பைண்டிங் : செக்ஷன்

விலை : ரூ.30

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆஃப்செட்,
சென்னை - 34.

ஆர். சத்பதி, இ.ஆ.ப.
ஆவணக்காப்பகம்
மற்றும் வரலாற்று
ஆராய்ச்சி ஆணையர்
(பொறுப்பு).

தமிழ்நாடு
ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை 8

க.எண்.3450 / ஆ.நூ / 95 நாள் : 10.4.95.

அனுமதிக் கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக்காப்பகம், நூலகம் - அனுபவ நாடி ஞான போதினி - மறு பதிப்பு செய்தல் - அனுமதி வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ் நூல்களைக் காப்பாற்றி, மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ் நூல்கள் மறு பதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றினை, தமிழக அரசு கல்வித் துறை அரசாணை (நிலை) எண்.372, கல்வி, நாள் 20.4.92ல் வெளியிட்டுள்ளது. அத்திட்டத்தின்படி "அனுபவ நாடி ஞானபோதினி" என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காகத் தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையர் (பொறுப்புக்காக)

(ஒ.ம்) ப. இராமசாமி

18-4-95

பெறுநர்
தாமரை நூலகம்,
7, என்.ஜி.ஓ.காலனி,
வடபழனி சென்னை - 600 026.

பதிப்புரை

நாடிப் பரிசோதனை மூலம் மனித உடலின் உள் உறுப்புகளில் உள்ள சீர்கேடுகள் வரை எல்லாவற்றையும் கண்டுபிடித்துக் கூற முடியும் என்று அனுபவ சாலிகள் கூறுகிறார்கள். ஆனால் கையைப் பிடித்துப் பார்ப்பது, வெறும் சடங்கு என்று கருதப்படுகின்ற அளவு சாதாரண மக்களிடையே ஒரு தவறான எண்ணம் ஏற்பட்டு விட்டது.

நாடிப் பரிசோதனை நூல்கள் எல்லாம் பாடல்களாகவே இருந்ததும், அவற்றைப் படித்தவர்களும் சரியாகப் புரிந்து கொள்ளாததும், இத்தவறான எண்ணத்திற்கு காரணம்.

தவிர பலநாள் அனுபவம் மூலமாகவே அறிந்து கொள்ளக் கூடிய ஒன்றை, மிக நுட்பமாக மனதில் கணக்கிட்டு அறியவேண்டிய ஒன்றை, சிலர் கையைத் தொட்டவுடனே தமக்கு எல்லாம் தெரிந்து விட்டது போல் பாசாங்கு செய்து தப்பும் தவறுமாகக் கூறவும் மருத்துவம் செய்யவும் ஆரம்பித்து விட்டதின் விளைவு என்றும் சொல்லலாம்.

இங்கே டாக்டர் S C. நம்பி அவர்கள் அற்புதமான ஒரு நூலை படைத்துத் தந்திருக்கின்றார். நாடிகளின் துடிப்பிற்கு ஏற்ற விளக்கப் படங்களை அவரே வரைந்து கொடுத்திருப்பது ஆரம்பத்தில் புரிந்து கொள்ளக் கடினமாக இருப்பினும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற முனைப்போடு கூர்ந்து கவனிப்பவர்களுக்கு தெற்றென உணர்த்தும் நல்ல துணையாக இருக்கும்.

இந்த அரியநூல் நீண்டகாலம் மக்களுக்குக் கிடைக்காமல் இருந்தது துரதிஷ்டமே. இதை பாதுகாத்து வைத்திருந்து வெளியிட அனுமதி தந்த ஆவணக் காப்பகத்திற்கும், அதன் ஆணையர் திரு. ஆர் .சத்பதி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு,
எஸ்.பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

ஸ்ரீ

அனுபவ

நாடி ஞான போதினி

இஃது

ஸ்ரீ

சிங்கம் செட்டி நம்மைய்ய செட்டியாரவர்களுடைய
பௌத்திரரும்,

வைசியதர்ம சிசு சிகித்ஸா

ஆயுர்வேத ஆஸ்பத்திரியின் டாக்டருமான,

ஸ்ரீமான்; சிங்கம் செட்டி, நம்பெருமான் செட்டியார்

என்கிற

S.C.நம்பி அவர்களால்,

ஆந்திர பாஷையில் தம் சுய அனுபவத்தை
வெளியிட்டதற்கிணங்க

P.V. துரைசாமி அய்யங்கார் அவர்களால்,

தமிழில் மொழி பெயர்க்கப்பெற்றது

1922

MADRAS

முகவுரை

தென் இந்தியாவிற்குத் திலகம் போல் விளங்கும் இச்சென்னை மாநகரின்கண் வைசிய குலத்திலுதித்தவரும் வைஷ்ணவ சாம்பிரதாயியும் வர்த்தகத் தொழிலுடையோரும் 1790-ல் ஸ்ரீரங்கப் பட்டணத்தில் டிப்பு சுல்தான் உபத்திரவ காலத்தில் ஸ்ரீரங்கப் பட்டணத்திலிருந்து இவிடம் வந்துவிட்ட மஹா-ஸ்ரீ சிங்கம் செட்டி நம்மைய செட்டி அண்டு சன்ஸ், அவர்களுடைய பௌத்திரருமான ஸ்ரீமான், சிங்கம் செட்டி நம்பெருமாள் செட்டி என்கிற S.C.நம்பி என்பவர் தமது நான்கு புதல்வர்கள் அற்ப ஜீவியாய்ப் போய் விட்டதினிமித்தம் மன முடைந்து நொந்து தாம் வாணிபத்தில் சம்பாதித்து சேகரித்த் பொருளனைத்தையும் பகவத் விஷயத் திலும் தேச யாத்திரையிலும் சிலவு செய்து இவ் விந்தியா முழுதும் சுற்றி முற்காலத்தில் அச்வனீ தேவதைகளால் எழுதப் பட்டு ஸ்ரீகிருஷ்ணசூரி வாக்கியானுக் கிரஹ பிரகடிதமான நாடி நக்ஷத்திர மாலை என்னும் கிரந்தத்தை பெரியோர்களின் உப தேச முறையால் கிரஹித்து சுமார் 20 வருஷ கால மாக அவர் அனுபவித்த நாடி ஸ்பர்ச கதிகளையும் அந்தந்த பூசாரங்களுக் கேற்ப தத்துவ பேதங்களை யும் ஆங்காங்குள்ள அனேகம் பெரியோர்களால் விசிதமாகத் தெரிந்து கொண்டு பற்பல இடங்களில்

பலநாள் யாத்திரைசெய்து பற்பல நற்சாக்ஷிப் பத்திரங்களும் மெடல்களும் பரிசு பெற்றிருக்கிறார்.

அவர் கடைசியர்கத் தான் கற்று அனுபவத்தில் கொண்டு வந்த இவ்வைத்திய விஷயத்தைத் தனது மூத்த நாலுரு புதல்வர்கள் காலமாய் விட்ட தன் காரணமாகத்தான் சிலவு செய்து எஞ்சிய சொற்ப திரவியத்தை வைசிய குலத்தவர்களிடம் ஒப்பிவித்து அதை மூலதனமாக வைத்துக் கொண்டு புரசைவாக்கம் முத்து முதலி தெருவில் ஓர் சிசுதர்ம சிகித்ஸாலயம் (குழந்தைகளுக்கு தர்ம ஆஸ்பத்திரி) நிர்மாணம் செய்து கொண்டு அதை வைசிய குலத்தவர்களின் சஹாயத்தால் நடத்திவருகிறார்.

ஸ்ரீமான், S.C.நம்பி அவர்கள் வைசிய குலத்தி லுதித்தவராயிருந்தும் வர்த்தக விஷயத்தை அறவே விட்டு மானிடசரீரிகளுக்குள்ள தேக உபாதிகளைத் தீர்த்து சௌக்கியமடையச் செய்விக்க வேண்டுமென்னும் தர்மத்தை மேற்கொண்டுதான் தேசமெங்கும் சுற்றி ஆங்காங்குள்ள பெரியோர்களிடம் கற்றுத் தன் அனுபவத்தில் கொண்டு வந்த இந்நாடி ஞான வித்தையை உலகோர்க்கெல்லாம் புத்தக ரூபமாக வெளியிட்டு ஒவ்வொரு குடும்பங்களிலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்குமுள்ள நோயின் தன்மையைத் தாங்களே தெரிந்துக் கொண்டு அதற்கேற்ற பரிகாரமும் செய்துகொண்டு சுகஜீவிகளாயிருக்க வேண்டுமென்கிற நல்ல எண்ணத்தினால் இதை உலகினருக்குப் புத்தக ரூபமாக வெளியிட்டு பயனடையச் செய்ய, நெடுநாள் யோசித்திருந்ததை

யான் கேள்வியுற்று இவ்வரிய பெரிய விஷயத்திற்கு இயன்ற உதவி செய்யவும் அந்த தருமத்திற்குச் சக காரியாயிருக்கவும் எண்ணங்கொண்டு ஸ்ரீமான், S.C.நம்பி அவர்களால் சுவானுபவமாய்க் கண்டறிந்த விஷயங்களை சாஸ்திர பூர்வமாய் தெலுங்கு பாஷையில் சொல்ல எனது சிற்றறிவுக் கெட்டியவாறு தமிழில் மொழி பெயர்த்து அதை நாடி ரூபம், நாடி ஞானம், நாடி லக்ஷணம், நாடி நிர்ணயம் என்னும் பல பங்குகளாய்ப் பிரித்து நாடி ஞானபோதினி என்னும் பெயரமைத்து புத்தக ரூபமாக உலகோர்க்கு உபகரிக்க எண்ணங்கொண்டேன்.

இது போன்ற வைத்திய புத்தகங்கள் அநேகம் இக்காலத்தில் வெளி வந்திருப்பினும் இப்புத்தகத்தில் கையினால் ஸ்பர்சித்துத் தெரிந்துக் கொள்ள வேண்டிய நாடிகளின் ஸ்பர்ச கதிகளையும் பற்பல நாடி ரூபங்களையும் கண்ணால் கண்டு தெரிந்து கொள்ளும் படியான விதமாய் சித்திரித்து சேர்க்கப் பட்டிருக்கிறது.

ஆகையால் இதில் காணும் விஷயங்களில் யாதேனும் ஸந்தேஹமுளதாயின் நேயர்கள் ஸ்ரீமான், S.C.நம்பி அவர்களிடம் சென்று சந்தேஹ நிவர்த்தி செய்து கொள்வதோடு இதைப் போல் S.C.நம்பி அவர்களால் வெளியாக்க விரும்பியிருக்கிற சரீரத்துவ சாஸ்திரம், மூலிகா சிகித்ஸா ஸாரஸங்கிரஹம், ரோக விலாவரி, உத் வேகயந்தா சிகித்ஸாபோதினி முதலிய அரிய புத்தகங்களை

யும் அப்போதைக்கப்போது வழங்கிப் படித்துப் பய னடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

இதில் காணும் குற்றங்குறைகளை நீக்கி குணங்களை கிரஹித்து வாசகர்கள் நோயற்ற வாழ் வெய்தி புத்திர பௌத்திராபிவிருத்தியுடன் சுகஜீவி களாய்ப் பெருக அனுக்கிர ஹிக்குமாறு ஸ்ரீமந் நாராயணனை முக்காலும் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்
P.V. துரைசாமிஅய்யங்கார்

INDEX

அட்டவணை

ஸ்பர்ச கதிகள் என்றாலென்ன!!!


மானிட சரீரத்தில் உள்ளுறுப்புகளின் பல ஹீனத்தால் ஸ்தம்பிக்கப்பட்ட வாத பித்த சிலேஷ்ம தோஷங்கள் ரத்த ஓட்டத்தை அனுசரிக்க அவிடத்தில் நேரும் குழப்பங்களை ஸ்வய நாடிகளின் மூலமாய் பலவித வித்தியாசங்களாய்க் காட்டுவதே ஸ்பர்சகதிகள்.

கற்பனை: 58வது பக்கத்தில் இரண்டாம் பாகம் காண்க.

அனுபவநாடி ஸ்பர்ச கதிகள்

வாதம்

1.



a. சர்ப்ப ஸ்பர்சகதி

b. மீன ஸ்பர்சகதி

c. அட்டை ஸ்பர்சகதி

d. டோலா ஸ்பர்சகதி

பித்தம்

2.



a. தவளை ஸ்பர்சகதி

b. காக ஸ்பர்சகதி

c. கிளி ஸ்பர்சகதி

d. மீன்குத்திப்பறவை ஸ்பர்சகதி

ஸ்லேஷ்மா

3.



a. மயில் ஸ்பர்சகதி

b. ஹம்ச ஸ்பர்சகதி

c. கஜ ஸ்பர்சகதி

d. குக்குட ஸ்பர்சகதி

மேற்கண்ட மூன்று நெம்பர்களின் 12 ஸ்பரிசகதிகளை நாடிரூபத்தில் விவரமாய் காண்க.

4.  ஆடும் ஸ்பர்சகதி

5. 

ஒன்றுக்கொன்று பார்க்கும்
ஒன்றுக்கொன்று கலக்கும் ஸ்பர்
ஒன்றுக்கொன்று பேசும் சகதி
கள்

6. 

ஒன்றுக்கொன்று
குதித்துக்கலக்கும் ஸ்பர்சகதி

7. 

ஒன்றுக்கொன்று பாயும்
ஸ்பர்சகதி


8.  சிரோக ஸ்பார்சகதி

9.  திரிதோஷ ஸ்பார்சகதி


10.  மேகத்துவம், கோணல், சுற்றும் ஸ்பார்சகதிகள்

11.  வக்கிர ஸ்பார்சகதி

12.  பறக்கும் ஸ்பார்சகதி, மேலுக்கு ஓடும் ஸ்பார்சகதி

13.  இருபக்கத்திலும் ஓடும் ஸ்பார்சகதி

14.  குதித்து அடங்கும் ஸ்பார்சகதி

15.  இருபக்கங்களிலும் நின்றுநின்று or பட்டும்படாமலும் பாயும் ஸ்பார்சகதி

16.  சிதறி or ஒன்றுக்கொன்று குதித்துக்கலக்கும் ஸ்பார்சகதி

17.  ஒன்றோடொன்று சக்ரகதியாய் கலந்து கொள்ளும் ஸ்பர்சகதி

18.  கடின, கம்பீரம், பிரகாச ஸ்பர்சகதி

19.  தீவிர ஸ்பர்சகதி

20  தன்னிடத்தில் குதிக்கும் ஸ்பர்சகதி

21  காற்றில் ஓடும், பறந்து மறையும் ஸ்பர்சகதி

22.  சலிக்கும், தலையை ஆட்டும் ஸ்பர்சகதி

23.  தன் இடத்தைவிட்டு மாறும் ஸ்பர்சகதி

24.  சக்ரஸ்பர்சகதி

25.  விசாலம் Or அந்தர்க்கத ஸ்பர்சகதி

26.  கர்ப்பரண ஸ்பர்சகதி

27.  **மின்னல் ஸ்வாசபந்தன ஸ்பர்சகதி**

இன்னாடி சாஸ்திரங்களில் தேர்ச்சியடைய விரும்பும் நண்பர்கள் முதலில் மேற்சொன்ன நாடி ஸ்பர்சகதிகளை அய்யமறக் கற்றுத் தெரிந்தபின் மற்ற நாடிரூபம், நாடிகியானம், நாடிலக்ஷணம், நாடி நிர்ணயம், இவைகளை முறையே கற்றுக் கொள்வதால் மிகுந்த பயனடையலாம்.

Various Aspects of Pulse

IN

DIFFERENT DISEASES

In diseases relating to **VATHA** the indications of Pulse are as under.

1. a. Assumes the zig-zag posture of a serpent.

   b. Assumes the swimming posture of a fish

   c. Assumes the form gradually taken by a leech in its sucking out the life blood.

   d. Assumes the form of the shadow of a swinging dola (an Indian hammock made of a cloth).

In diseases relating to **PITHA** the indications of Pulse are as under.

2. a. Assumes the jumping motion of a frog in water with the feet spread.

b. Assumes the flying motion of a crow in air.

c. Assumes the motion of a parrot shaking its head from one side to the other.

d. Assumes the attitude of a king-fisher flying in the air watching its prey in water and suddenly darting itself on the water surface without moving the wings and again going into the air carrying its prey.

In diseases relating to **SLESHMA** the indications of Pulse are as under.

3. a. Peacock. Assumes the gait of a peacock which while strolling on the ground shakes its head and frequently contracts its comb.

b. Swan a divine a bird, its actions are in conjunction with Vatha and Pitha. In the collapsed stage of Vatha and Pitha, Slesnma frequently changes its place until life expires.

c. It assumes the attitude of an elephant, subdues Vatha and Pitha, and seems to proclaim itself fearfully. It indicates a shining splendour also.

d. It assumes the attitude of a crowing cock with its head raised and wings beating.

Various results of the different Combinations of Vatha, Pitha and Sleshma.

4. Dancing movement

5. a. Symptom of looking at each other.

b. Symptom of blending with each other

c. Symptom of speaking with each other.

6. Symptom of jumping and mixing with each other.

7. Symptom of attacking each other.

8. Symptom either (1) of a healthy pulse or (2) Meha Rcgam i.e., venereal diseases.

9. Symptom when all the three viz. Vatha, Pitha and Sleshma are vitiated,

10. Curving or revolving symptom being those of veneral diseases.

11. Wheeling symptom

12. Flying or running symptom.

13. Symptom of running on either side

14. Symptom of jumping on either side and settling.

15. Symptom of standing on either side or slightly touching and often gliding along.
16. Symptom of dissipation or jumping and blending with each other
17. Entwining with each other and revolving symptom
18. Symptom of rough-ness, depth and brightness
19. Symptom of acuteness
20. Symptom of jumping in its own place.
21. Symptom of fleeing in the air or flying and playing the game of hide and seek
22. Symptom of exhaustion or that of shaking its head.
23. Symptom of changing their original places
24. Whirling symptom.

25. Symptom of spreading out and becoming invisible

26 Symptom of ulcertion in the stomach or ulceration in the womb.

27. Symptom of lightning or that of breathing having stopped.

Persons who are desirous of mastering this science of Pulse, must first grasp without any misapprehension the above said various aspects of pulse in different diseases, and then learn systematically and in their order, the modes and pulse, the knowledge of pulse the properties of pulse, and the end and aim of the science of Pulse. This is the only way by which a mastery over the science could be obtained.

முக்கிய கவனிப்பு

அனுபவசாலியான தேர்ந்த வைத்தியன் நாடியை பரிசோதிக்கும்போது நிர்மலசித்தனாய் ஆத்துமாவையும், மனதையும் சாந்தி செய்து கொண்டு ரோகியின் வலதுகையை தன் மூன்று விரல்களால் பிடித்து தோஷா தோஷங்களை தெரிந்து கொள்ள வேண்டியது.

ஸ்திரீகளுக்கு நாபி மேல் முகமாகவும், புருஷர்களுக்கு கீழ் முகமாகவும் இருப்பதினால் ஸ்திரீ புருஷர்களுக்கு நாடிகள் வித்தியாசம் இருக்கும். ஆகையால் ஸ்திரீகளுக்கு இடக்கையிலேயும், புருஷர்களுக்கு வலக்கையிலேயும் நாடியை பரீக்ஷிக்கத் தகுந்தது.

ரோகியின் நாடியைப் பலதடவை விட்டு விட்டுப் பார்த்து புத்தியால் மூன்று தரம் பரீக்ஷித்து ரோகம், இத்தகையது என்று நிர்ணயம் செய்ய வேண்டும்.

ஆயுள், சரீரதாருட்யம், ஸ்திதி, ஜுரவிமோசனம் இவைகளை பாத நாடியைக் கொண்டு தெரிந்து கொள்ள வேண்டும். எவரெவர்களுடைய நாடியானது கையிலாவது கண்டத்திலாவது பட்டும் படாமலும் ஸுவஸ்தானத்தைவிட்டு பேசும் பக்ஷத்தில் ஆயுள் க்ஷீணமென்று நினைக்க வேண்டும்.

பித்தம், சிலேஷ்மம், அஜீர்ணம், ஆம தோஷம், ஜுரதீவிரம், பசி, துஷ்டவாதம், இவை களை ஹஸ்த நாடியால் பரீக்ஷிக்கவும்.

விருந்து போஜனத்தாலுண்டாகும் தோஷ ஜுரம், தாபம், ஆயாசம், இளைப்பு, பயம், சோகம், கோபம், மைதுனத்தாலுண்டாகும் ஜுரம் (அபி காதம்) இவைகளைக் கண்ட நாடியைக் கொண்டு அறிந்து கொள்ளவும். மரணம், ஆயுள் க்ஷீணம், நாமம், நேத்திரரோகம், கர்ண ரோகம், சிரோ ரோகம், முகரோகம் இவைகளை நாசிகாநாடி யைப் பற்றித் தெரிந்துக் கொள்ளவேண்டும். ஸ்நா னம் செய்தவன், போஜனம் செய்தவன், சரீரத்தில் எண்ணை பூசிக் கொண்டவன், பசியை அறிந்து கொள்ளாதவன், தாகமாயிருக்கிறவன் தூங்கு கிறவன் இவர்களுக்கு நாடி தெரியாது.

நாடி ஒரு சமயத்தில் சலித்துக் கொண்டும், ஒரு சமயம் சூக்ஷ்மமாய் ஆடிக் கொண்டும், அதோடு காணாமலும் திரும்பி அகப்பட்டும் இருந்தால் வைத் தியன் அப்படிப்பட்ட வியாதி அசாத்தியமென்று தெரிந்து தூரத்தில் விலகிவிட வேண்டும்.

எந்த ரோகியின் நாடியானது அதி சூக்ஷ்மமா யும், அதி வேகமாயும், சீதளமாயும் நடக்கிறதோ அந்த ரோகி க்ஷீண ஆயுளையுடையவன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். எந்த ரோகியின்நாடி யானது மின்னல் போல் தெரிந்தும் தெரியாதது மாக காணப்பட்டாலும் நாடிகளுக்கு ஏற்பட்ட கால மல்லாத அகாலங்களில் மின்னல்போல் சலித்தா லும் அப்படிப்பட்ட ரோகி யமலோகத்திற்கேகு வான்.

நாடிரூபம்

வாதம்

வாயு காற்றோடு சம்பந்தப்பட்டு வாதம் என்று பெயர் பெற்று மலத்திலிருக்கும். இது மானிட சரீரத்தின் அங்கங்களில் பித்த சீதளத்தினால் பீடிக்கும்போது அங்கங்குள்ள அவயங்களில் தோஷித்து இடத்தைப் பெறும். இது கருப்பு நிறமுடைதாயிருக்கும்.

a. சர்ப்பநாடி அல்லது மேகநாடி:- சர்ப்பத்தைப் போல் நாடி வளைந்த ஜாடை காட்டும்.

b. மீன் நாடி:-மீன் தண்ணீரில் நீந்துவது போல் நாடி ஜாடை காட்டும்.

c. அட்டைநாடி:- அட்டை மனித சரீரத்திலுள்ள இரத்தத்தையும் கட்டிகளிலுள்ள துர்நீர், சீழ் முதலியவ்வைகளையும் உரிந்து பருத்துக் காண்பது போல் மற்ற நாடிகளுடைய பலத்தை இழுத்துக் கொண்டு தடித்திருப்பது போன்ற ஜாடை காட்டும்.

d. டோலாநாடி:-இந்த டோலா நாடியானது குழந்தைகளை துணியைக் கொண்டு கட்டிய ஏணையில் தாலாட்டினால் அந்த நிழல் எப்படித் தெரியுமோ அந்த ஜாடை காட்டும்.

பித்தம்

பித்தம் என்றால் நெருப்பு. இது மஞ்சள் நிற மான திர்வ பதார்த்தம். இது மூத்திரத்தில் சம்பந்தப் பட்டது. இது தீவிரமாயிருக்கும்போது அவயவங் களினுள் ஆவியை உண்டாக்கி (உஷ்ணம்) அங்கங் களின் இயற்கையை மாற்றி விடும்.

a. தவளைநாடி:- தவளை தண்ணீரில் கால் களை விரித்துக்கொண்டு எப்படி ஒரிடத் திலிருந்து ஒரிடத்திற் குதிக்குமோ அது போன்ற ஜாடைகாட்டும்.

b. காகநாடி:- ஆகாயத்தில் பறக்கும் போது எப்படி இறக்கையை விரித்துக் கொண்டு ஆட்டுமோ அது போன்ற ஜாடை காட்டும்.

c. கிளிநாடி:- இந்த கிளிநாடி என்பது கிளி தன் தலையை பக்கங்களில் எப்படி திருப் பித்திருப்பிக் காட்டுமோ அந்த ஜாடைக் காட்டும்.

d. மீன்குத்திப் பறவை நாடி:-இப்பறவை யானது இறக்கையை ஆட்டாமல் பறந்து கொண்டு மீன் பிடிக்கும் போது ஜலத்தின் மேல் உயரத்தில் இருந்த இடத் திலேயே இருந்துக் கொண்டு இறக் கையை ஆட்டிக் கொண்டே கீழே ஜலத்தை பார்த்துக் கொண்டிருந்து ரிவ் வென்று அடியில் ஜலத்தில் பாய்ந்து மீனைப் பிடித்துக் கொண்டு பறந்து செல் வது போன்ற ஜாடை காட்டும்.

சிலேஷ்மம்

சிலேஷ்மம் ஜலத்தோடு சம்பந்தித்தது. இது இரத்தத்திலுள்ள சத்தை சுக்கில ஸ்தானத்தில் சேர்த்து இந்திரியங்களையும், தாதுக்களையும் குளிர்ச்சி செய்யும் குணமுடையது.

a. மயில்நாடி:- மயில் பூமியில் நடக்கும் போது அடிக்கொருதரம் தலையை அசைப்பது போலும், அதன் தலையிலுள்ள கொண்டையை நெறித்துக் காட்டுவது போன்ற ஜாடை காட்டும்.

b. ஹம்ஸநாடி-: வாதபித்த நாடிகளிடத்திற்கு அடிக்கடி ஓடிக்கொண்டு படத்தில் கண்டதுபோல் வேறொரு இடத்தில் தலையை ஆட்டிக்கொண்டிருக்கும்.

c. யானைநாடி:- (கஜநாடி) மற்ற இரண்டு நாடிகளையும் அடக்கி பயங்கரமாக ஸ்தம்பித்த ஜாடை காட்டும்.

d. கோழி நாடி:- (குக்குடநாடி) கோழி தன் தலையைத் தூக்கியும், இறக்கையை விரித்துக் கொண்டும் கூப்பிடும் போது அதன் நிழல் வெய்யலில் தெரிகிற மாதிரியான ஜாடைகாட்டும்.

மேற்சொன்ன மூன்று நாடிகளின் விவரங்களை முற்கூறிய நாடி ஸ்பர்சகதிகளின் 1–2–3 நெம்பர்களில் விவரமாய் காண்க.

ரோகாதிகாலங்களில் கவனிக்க வேண்டிய குறிப்புகள்


ஜன்மம்

நாடிகள்	ஸ்திரம்	காலம்	ஆயுள்	க்ஷீணம்
வாயு	காற்று	தோஷித்தால் வாதம்	ஜீவத்தை பாழாக்கும்	பந்திக்கும்
பித்தம்	அக்கினி	தோஷித்தால் சீதளம்	ஜீர்ணத்தை பாழாக்கும்	மூர்ச்சைபடச் செய்யும்
சிலேஷ்மம்	ஆவி	தோஷித்தால் உஷ்ணம்	விசர்ஜனம் செய்யும்	மிருத்யுவை உண்டாக்கும்

வாத நாடி ஜீவ நாடியாகவும், பித்தநாடி ஜீர்ணநாடியாகவும், சிலேஷ்மநாடி ஆயுள்நாடியாகவும் கவனித்து புத்திசாலியான வைத்தியன் மூன்று நாடிகளையும் ஆபத்துக் காலத்தில் முக்கியமாக பிராணவாயுவின் கதியைக் கொண்டும், மானிட தத்துவ பேதங்களைக் கொண்டும் தெரிந்துக்கொண்டு சிகிச்சை செய்தும் தவிர ஔஷத சக்தியைத் தெரிந்து உபயோகிப்பதும், தோஷா தோஷங்களைத் தெரிந்துகொண்டு மூலிகா சாதகங்களைச் செய்வதும் சிரேஷ்டமானது.

நாடி ஞானபோதினி

வைத்தியன் நாடியை கவனிக்க வேண்டிய காலத்தில் சுட்டுவிரல் வாதநாடி என்றும், மத்திய விரல் பித்தநாடி என்றும், மோதிரவிரல் சிலேஷ்ம நாடி என்றும், புருஷர்களுக்கு வலது கையிலேயும், ஸ்திரீகளுக்கு இடது கையிலேயும் உள்ளங்கைக்கு ஓர் அங்குலம் கீழ்மணிக்கட்டில் பிடித்துப் பார்த்துத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.



ஓர் மனிதனுடைய நாடியை பரிசோதிக்கும்போது மூன்று நாடிகளும் சமகதியாகயிருந்தால் நிரோகி என்று பெயர். வக்ரகதியாகயிருந்தால் ரோகி என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

நிரோகிகளின் நாடிலக்ஷணம்

காலம்

வயிற்றில் ஆகாரமில்லாத காலை வேளையில் வாதநாடி தன் சுவஸ்தானத்தில் நின்று பேச வேண்டும். மற்ற பித்த சிலேஷ்ம நாடிகள் தன்தன் ஸ்தானங்களில் பேசி அடங்கியிருக்கும்.

மத்தியான காலத்தில் வயிற்றில் ஆகாரம் இருக்கும் போது பித்தநாடி தன் சுவஸ்தானத்தில் நின்று பேச வேண்டும். வாதநாடி அடங்கியும்,

பித்தநாடி ஏறி இறங்கியும் சூக்ஷமமாய் காட்டிக் கொண்டிருக்கும்.

மாலை வேளையில் வயிற்றில் ஆகாரம் ஜீரணித்திருக்கும் போது சிலேஷ்மநாடி தன் சுவஸ் தானத்தில் நின்று பேச வேண்டும். பித்தநாடி அடங் கியும் வாதநாடி தன் சுவஸ்தானத்தில் சூக்ஷமமாயும் பேச வேண்டும்.

மானிட சரீரத்தில் உண்டாயிருக்கும் சூக்ஷ்ம நாடிகளுள் பிரதானமாகவுள்ள நாடிகளில் மும் மூர்த்திகளின் நாமம் அடைந்த இளா, பிங்களா, சுஷும்னா என்னும் நாடிகள் தேகத்திலுள்ள சர்வ அவயவங்களினுள்ளும் உள்ள சர்வ தோஷா தோஷங்களையும் கிரஹித்துக் கொண்டு, இளா வாத நாடி என்றும், பிங்களா பித்தநாடி என்றும், சுஷும்னா சிலேஷ்ம நாடி என்றும் பெயரடைந்து வியாபித்திருக்கும். வாதம் மலத்துடனும், பித்தம் மூத்திரத்துடனும், சிலேஷ்மம் சுக்கிலத்துடனும் கலந் திருக்கும்.

ரோகிகளுக்கு காலையில் வாத நாடி சிலேஷ்மகதமாகவும், பகலில் வாதகதமாகவும், இராத்திரியில் பித்தகதமாகவும் காட்டும்.

இவ்விதமிருப்பதில் காலைவேளையில் வாத நாடி அதி தீவிரமாய் காட்டினால் வாதரோகி யென்றும், மத்தியானத்தில் பித்தநாடி அதிதீவிர மாய்க் காட்டினால் பித்தரோகி என்றும், சாயங் காலத்தில் சிலேஷ்மநாடி அதிதீவிரமாய் காட்டி

னால் சிலேஷ்ம ரோகியென்றும் சொல்லப்படும். அகாலத்தில் தீவிரமாய் பேசுவதும் உண்டு.

* சுதந்தரநாடி

1. வாதநாடி – (ஓடும் நாடி):- **கால பேதங்களினாலும், @மானிட தத்துவங்களினாலும் நாடியின் குறிப்பை நாடி ஸ்பர்சகதிகளின் பட்த்தில் கண்டதுபோல் நாடி ரூபங்களைக் கொண்டு கவனித்துக் கொள்ளவும். இதில் நாடி அதிவேகமாய் ஒடினால் வாத ஜுரமென்று பெயர்.
2. பித்தநாடி – (தீவிரநாடி) :-கால பேதங்களினாலும் மானிட தத்துவங்களினாலும் நாடியின் குறிப்பை நாடி ஸ்பர்சகதிகளின் படத்தில் கண்டதுபோல் நாடி ரூபங்களைக் கொண்டு கவனித்துக் கொள்ளவும். இதில் நாடி அதிவேகமாய் ஒடினால் பித்த ஜுரமென்று பெயர்.

* சுதந்திர நாடி என்றால் – கற்பத்திலிருந்து பிறக்கும்போதே இயற்கையாகவே ஏற்பட்ட நாடி.

** காலபேதம் என்றால் – காலை, பகல், மாலை, இரவு காலங்கள்.

@ மானிட தத்துவம் என்றால் – சுதந்திர நாடிகளுக்கு விரோதமான ஆஹார பேதங்களினால் ஏற்பட்ட * சப்த தாதுக்களின் தோஷங்களுக்கே தத்துவம் என்று பெயர்.

3. சிலேஷ்ம நாடி – (மந்த நாடி அல்லது சூக்ஷ்ம நாடி):- கால பேதங்களினாலும், மானிட தத்துவங்களினாலும் நாடியின் குறிப்பை நாடி ஸ்பர்சகதிகளின் படத்தில் கண்டது போல் நாடி ரூபங்களைக் கொண்டு கவனித்துக் கொள்ளவும். இதில் நாடி அதிவேகமாய் – ஒடினால் சிலேஷ்ம ஜுரமென்று பெயர்.

சப்த தாதுக்களாவன:-

ரசம் – ஆகார சாரம்.

ரக்தம் – சிவப்பு நிறமுள்ள சத்து.

மாமிசம் –சுத்த இரத்தத்தினாலும், கொழுப்பி னாலும் உண்டாகிறது.

மேதஸ் – கொழுப்பு.

மஜ்ஜை – எலும்புகளிலுள்ள கொழுப்பு.

ஹஸ்தி – எலும்பு.

சுக்லம் – இந்திரியம்.

நாடி லக்ஷணம்

4. ரோகிநாடி லக்ஷணம்:- மனிதர்களுக்கு நோய் உண்டாவதற்கு முன் படத்தில் கண்டது போல் நாடிகள் வக்கிரித்துக் காட்டுவதாம்.

5. வாதபித்த நாடி லக்ஷணம்:-

வாதநாடி தலையெடுத்துக் காட்டிச் சிறிது அடங்கி பித்தநாடி தீவிரமாக ஒடினால் வாதபித்தமென்று பெயர்.

6. வாதபித்த சிலேஷ்மநாடி லக்ஷணம்:- மேற்சொன்ன நாடியில் சிலேஷ்ம நாடி சிறிது தலையெடுத்துக் காட்டினால் வாத பித்த சிலேஷ்மமென்றும் சொல்லப் படும்.

7. பித்தவாதநாடி லக்ஷணம்:-

பித்தநாடி தலையெடுத்துக் காட்டி சிறிது அடங்கி வாதநாடி தீவிரமாக ஓடினால் பித்தவாதமென்று பெயர்.

8. பித்தவாத சிலேஷ்மநாடி லக்ஷணம்:-

மேற்சொன்ன நாடியில் சிலேஷ்மநாடி சிறிது தலையெடுத்துக் காட்டினால் பித்த வாத சிலேஷ்மமென்று பெயர்.

9. சிலேஷ்ம பித்தநாடி லக்ஷணம்:-

சிலேஷ்ம நாடி தலையெடுத்துக் காட்டி சிறிது அடங்கி பித்த நாடியைத் தூக்கிக்

காட்டினால் சிலேஷ்ம பித்தமென்று சொல்லப்படும்.



10. சிலேஷ்ம பித்தவாத நாடி லக்ஷணம்:-

மேற்சொன்ன நாடியில் வாத நாடி சிறிது தலையெடுத்துக் காட்டினால் சிலேஷ்ம பித்த வாதமென்றும் கூறப்படும்.



11. திரிதோஷ நாடி லக்ஷணம்:-

வாத நாடியும் சிலேஷ்மநாடியும் சமானமாய் கலந்துகாட்டியும் பித்தநாடி அடங்கியுமிருந்தால் பித்த சீதளமென்றும், மறுபடியும் பித்தநாடி தலையெடுத்து மூன்றும் ஒன்றுக்கொன்று சேர்ந்து காட்டினால் திரிதோஷநாடி என்றும் சொல்லப்படும்.

இதற்குச் சிகித்ஸை

வாத நாடியை விருத்திப்படுத்த ஔஷதமும், உடனே வாயு பதார்த்தமுள்ள கஞ்சியும், அதை ஜீரணிக்கும் படியான ஔஷதத்தையும் கொடுத்து மூன்று நாடிகளையும் வலிவு படுத்திக்கொள்ள வேண்டும்.

12 தோஷநாடி லக்ஷணம்:-



வாத ரோகத்திற்கு தன் காலத்தில் வாத நாடி வக்கிரித்துக் காட்டும். பித்தரோகத்திற்கு பித்தநாடி தன்காலத்தில் மின்னல் போல் சலித்துக் காட்டும். சிலேஷ்ம


ரோகத்திற்கு சிலேஷ்மநாடி கடினமாய் தன் ஸ்தானத்தில் நின்று பேசிக்கொண்டிருக்கும். துவந்த ரோகத்திற்கு திரி நாடிகளும் ஒன்றுக்கொன்று கலந்து பேசும். இதைப் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்க.

13. சன்னிபாதநாடி லக்ஷணம்:-



(சாத்தியம்) நாடிகள் அந்தந்த காலத்தில் அதிதீவிரமாய் பேசி தக்ஷணம் அடங்குவது போல் காண்பித்து மறுபடியும் மூன்று நாடிகளும் தம் ஸ்தானத்தில் நின்று அசையாமல் பேசும், நாடிகள் காட்டி மறைந்தால் அது நிரோகி மிருத்தியு நாடி எனப்படும்.

14. திரிதோஷ சன்னிபாத நாடி லக்ஷணம்:-



1. (சாத்தியாசாத்தியம்) நாடிகள் அந்தந்த காலத்தில் தனது சுவஸ்தானத்திலிருந்து கொண்டு படத்தில் காட்டியது போல் இரண்டு புறங்களிலும் அசைந்து கொண்டும் சுற்றிக் கொண்டும் பலவிதமாக வளைந்து கொண்டும் காட்டி திடீரென்று மறைந்தது போலும் காட்டி தக்ஷணமே அதிதீவிரமாய் ஓடும்.

2. (கஷ்ட சாத்தியம்) நாடிகள் ஒருகாலத்தில் மந்தமாயும் துண்டுதுண்டாகச் சிதறியும், சலித்தும், நின்றுநின்றும், பட்டும் படா

மலும், நாடியே புலப்படாமலும், தம் ஸ்தானத்தை விட்டுப் போய் வருவது போலும் வயித்தியன் விரல்களுக்கு அகப்படாமல் போகும்.

3. (அசாத்தியநாடி) நாடிகள் அதிதீவிரமாய்ப் பேசி தன் தன் ஸ்தானத்தில் ஸ்திரமாக நின்று மின்னல் போல் பக்கங்களில் பாய்ந்து காட்டிச் சிறிது காலம் நாடியே புலப்படாமலுமிருந்து பல விதமாய் சிதறிக்காட்டும்.

4. (தக்ஷணமிருத்தியு நாடி) நாடிகள் அதி வேகமாய் நடந்து தெரிந்ததும் தெரியாததுமாய் மறைந்து மறுபடியும் அதி வேகமாய் ஓடி பலவிதமாய்ப் பாயும்.


N.B. பித்த நாடி அதிதீவிரமாய்ப் பேசி அடங்கி சிலேத்தும நாடி தலையெடுத்துத் தீவிரமாய் நடந்து பித்தநாடியை அடக்கி வாதநாடியுடன் கலந்து மூன்றும் சேர்ந்து ஓடிவிடும்.

15. ரோகரஹித சுவஸ்த நாடி லக்ஷணம்:-



அந்தந்த காலத்தில் அந்தந்த நாடிகள் தலையெடுத்துக் காட்டி படத்தில் காண்பித்தது போல் ஒன்றோடொன்று சேர்ந்து காட்டினால் ரோக நிவாரணி என்று சொல்ல வேண்டும்.


16. அபிகாதா திரோகநாடி லக்ஷணம்:-



அகால போஜனம், அமித போஜனம், அதி மனக்கவலை, அதி துக்கம், அதி சம்

போகம், அதி சம்பாஷணை, அதி தேஹ சிரமம், அதி யாத்திரை, தூக்கமின்மை, அதிவேக ஔஷத சேவை, நிராகாரி இவர்கள் பலஹீனர்களாயிருக்கும் பொழுது நாடிகள் அதி கம்பீரமாயும் வலி வுள்ளதாகவும் நின்ற இடத்தில் நின்ற படியும் காட்டும்.

17. சந்தேக மிருத்துயு நாடி லக்ஷணம்:-




உயரத்திலிருந்து கீழ் விழுந்தவன், கத்தி யால் வெட்டுபட்டவன், குண்டு அடி பட்டவன்; பயந்தவன், சுக்ல நஷ்டமான வன் இவர்களுக்கு மேற் சொல்லியது போல் தக்ஷணமிருத்தியு நாடியைக் காட் டினாலும் இவர்களுக்கு மிருத்துயு பயம் இல்லை. சிகிச்சையில் தேருவார்கள்.

18. பூதநாடி லக்ஷணம்:-



கிரஹ சேஷ்டை யுள்ளவர்களுக்கும், ஈடு மருந்துகளால் கஷ்டப் படுகிறவர்களுக் கும், மேற் சொன்ன திரிதோஷ நாடிகள் போல் வாதபித்த சிலேஷ்மங்கள் ஒன்றுக்கொன்று கலந்து ஒரே ரூபமாய்ப் பேசும்.

19. ஸன்னிபாத துவந்த நாடி லக்ஷணம்:-



மூன்று நாடிகளும் மந்த கதியடைந்து காற் றில் அசையாமலிருப்பது போல் ஸ்தம் பித்து விசாலமாகக் காட்டி உடைந்தது போல் பலஹீனமாக நின்று நின்று குதித்துக் கொண்டு தலை யெடுப்பதும்

தாழ்த்துவது மாகவும் சிறிது நேரத்திற் கெல்லாம் அதி தீவிரமாகவும் ஆடிக் கொண்டிருக்கும்.

இந்த நாடியை ஹஸ்தத்திலும் பாதத்திலும் பரீக்ஷித்துக்கொள்ள வேண்டியது.

நாடிகள் மேற்கண்ட விதமாக இருந்தால் பிராணி ஜீவித்திருக்குமென்று சொல் வதற்கில்லை.

20. வாயுபந்தன (மலபந்த) ரோகி நாடி லக்ஷணம்:-



காலையில் வாத நாடி மிருதுவாகவும், மத்தியானத்தில் பித்த நாடி நின்று நின்றும், சாயங்காலத்தில் சிலேஷ்ம நாடி அதிவேகமாகவும், இராக் காலத்தில் முழு தும் சமான வேகத்துடனும் நடக்கும். இப்படிப் பட்டவர்களுக்கு மலச்சிக்கல் என்று சொல்லவேண்டும்.

21. மலஅபக்வ சிலேஷ்ம தோஷ நாடி லக்ஷணம்:-




காலையில் வாத பித்த நாடிகளுக்கு மேல் சிலேஷ்ம நாடி இரண்டு பாகமாக தலை யெடுத்துக்காட்டி தலையை அசைத்துக் கொண்டிருக்கும். இந்த சிலேஷ்மநாடி தன்காலமான மாலையில் தன்னிடத்தில் அடங்கி மந்தமாகக் காட்டும்.

22. மதரோகநாடி:-




(புருஷர்கள் அல்லது ஸ்ரீகள் நல்ல வலி வான ஆகாரத்தால் புஷ்டியடைந்து சம் போகமில்லாமலிருப்பவர்களுக்கு லக்ஷ ணம்) மூன்று நாடிகளும் சக்கரமாகவும் ஒன்றுக்கொன்று கலந்து ஒரே ரூபமாக படத்தில் கண்டது போலிருக்கும்.

23. துஷ்டரத்த நாடிலக்ஷணம்:-



அந்தந்த நாடிகள் அந்தந்த காலத்தில் தன் தன் ஸ்தானத்தைவிட்டு மாறி சலித்துக் கொண்டிருக்கும்.

24. அஜீர்ண நாடி:-



காலையில் வாதநாடி கையைப் பிடித்துப் பார்த்த போது காணாமலிருந்து மெது வாகத் தலையெடுத்து மந்தகதியாகக் காட் டும். மற்ற காலங்களில் இந்த வாதநாடி தூங்குவது போலிருக்கும். பகலில் பித்த நாடி தன் ஸ்தானத்தில் நின்று அதிவேகு மாய் காட்டும். சிலேஷ்மநாடி மாலையில் மற்ற நாடிகளுடன் பாயும்.

அஜீர்ண நாடி லக்ஷணம்:- (ரோகாதிகாலம்)

a பித்தநாடி அதிக தீவிரமாகவும் பாதா ளத்தில் (அடியில்) சக்கரகதியாகவும் எந்த காலத்திலும் ஒரே மாதிரியாகவும், வக்கர கதியடைந்தது போலவும், காற்றில் பறப் பது போலும், ஆடிக்கொண்டிருக்கும்,

மற்ற இரண்டு நாடிகளும் மந்தமாய்க் காட்டும்.

25. துஷ்ட பித்தநாடி:-




(மதூசிகாவியாதி) வாத சிலேஷ்ம நாடிகள் வலுவில்லாமலும் பித்தநாடி அதிவேகமாய்க் காட்டும். மேற்கண்ட துஷ்ட பித்தநாடி தன் இடத்தில் நின்று பேசினால் நிரோகி என்றும், தன் ஸ்தானத்தை விட்டு அசைந்துபேசினால் மிருத்துயுவென்றும் சொல்லப்படும்.

26. கபரோக நாடிலக்ஷணம்:-



வாத பித்த நாடிகள் மந்தமாயிருக்க சிலேஷ்மநாடி வாத பித்த நாடிகளிடத்தில் ஓடிக்கொண்டும் வலுவாய் தன் ஸ்தானத்தில் உறுதியாய் நின்று பேசிக்கொண்டும் மூன்று நாடிகளும் படத்தில் காட்டியது போல் கோணல் கோணலாக பல விதமாய் வக்கிரித்துக்காட்டும். அதிதீவிரமாய் நடந்தால் சிலேஷ்ம ஜுரம் என்று பெயர்.

27. கிரஹணி ரோகநாடி:-




வெளிப்படும் மலத்தின் பேதத்தினால் நாடிகள் அடியில் விழுந்தது போல் அதிசூக்ஷ்மமாய் காண்பித்துக் கொண்டே வாதநாடி சற்று மேலும் பித்தநாடி சற்றுக் குறைந்தும் சிலேஷ்ம நாடி சற்றுத் தலையெடுத்துமிருந்து படத்தில் காட்டியது

போல் வளைந்து பேசினால் . பிராண பயம் இல்லை. வளைந்து காட்டா விட்டால் ஆபத்து உண்டாகும்.

N.B. மலம் வாதத்தில் சேர்ந்தால் உலர்ந்தும் பித்தத்தில் சேர்ந்தால் குழம்பாகவும், சிலேஷ்மத்தில் சேர்ந்தால் நீராகவும், வாத பித்தத்திலிருந்தால் கருப்பு மஞ்சள் கலந்த மாதிரியாகவும், வாத சிலேஷ்மத்திலிருந்தால் நுரையுடனும், பித்தவாதத்திலிருந்தால் மஞ்சள் வெள்ளையுடன் சேர்ந்தும், பித்தத்தில் பித்தம் சேர்ந்தால் சிவப்பு கலந்த குழம்பாகவும், பித்த சிலேஷ்மத்தில் சேர்ந்தால் நாற்றத்துடனும் சப்தத்துடனும், சன்னி பாதத்தில் சேர்ந்தால் அனேக வர்ணங்களாகவும், குழம்பாகவும், தண்ணியாகவும், துவந்தத்தில் 'சேர்ந்தால் வெள்ளை, மஞ்சள், கறுப்பு, சிவப்பு, பச்சை, நீலம், மேக வர்ணமாகவுமிருக்கும்.

28. க்ஷீணநாடியும் சிகிச்சையும்:-



மூன்று நாடிகளும் அந்தந்த காலங்களில் அந்தந்த நாடிகள் அதி பலஹீனமாய்க் காட்டி, காலமில்லாத காலத்தில் எந்த நாடியுடன் சேருகிறதோ அந்தநாடியை அதற்கேற்ற ஆகார சாரங்களின் மூலமாய் வலிவுபடுத்திக் கொள்ளவும்.

நாடி நிர்ணயம்

(தீர்க்கரோக நாடிலக்ஷணம்)

29. வாதபித்த நாடி லக்ஷணம்:-

வாதநாடியில் பித்தம் கலந்திருந்தால் வாத பித்தமென்று நாடிகள் காட்டும். இதில் வாதநாடி தீவிரமாய் இருந்தால் வாத பித்த ஜுரமென்று பெயர். வாதநாடி மந்த மாக இருந்தால் அந்தர்க்கத ஜுர மென்னப்படும். இதின் குணம் கால் சீதள மாயிருக்கும். தேகம் வீக்கம் கொடுக்கும். சுத்த வாதத்தில் பித்த தோஷத்தால், சோகை, பாண்டு, காமாலை, மஹோதரம் இவை உண்டாகும்.

30. வாதசிலேஷ்ம நாடி லக்ஷணம்:-

வாதநாடியில் சிலேஷ்மம் கலந்திருந்தால் வாத சிலேஷ்மமென்று நாடிகள் காட்டும். இதில் வாதநாடி அதிதீவிரமாயிருந்தால் வாத சிலேஷ்ம ஜுரமென்று பெயர். வாத நாடி மந்தமாயிருந்தால் அந்தர்கத ஜுரமென்று சொல்லப்படும். அதின் குணம் சரீரம் வெளுக்கும், ஆகாரம் ஏற்றுக்கொள்ளாது.

31. சுத்தவாத நாடி லக்ஷணம்:-

வாத நாடியில் வாயு கலந்திருந்தால் சுத்த வாதமென்று நாடிகள் காட்டும். இதில்

வாதநாடி அதிதீவிரமாயிருந்தால் கேவல வாத ஜுரமென்று பெயர். வாதநாடி மந்தமாக இருந்தால் அந்தர்க்கத ஜுரமென்று பெயர்.


இதின் குணம்:-தேகம் இளைக்கும் ஆகாரம்; அதிகமாய் செல்லாது; சுத்த வாதநாடியில் வாத தோஷத்தால் உண்டாகும் வியாதி சோகை, பாண்டு, சன்னிபாதம்.

32. பித்தவாத நாடிலக்ஷணம்:-



பித்த நாடியில் வாதம் சேர்ந்திருந்தால் பித்த வாதமென்று பெயர். பித்தநாடி அதி தீவிரமாயிருந்தால் பித்த வாதஜுர மென்று பெயர். பித்தநாடி மந்தமாக இருந்தால் அந்தர்க்கத பித்தவாத ஜுர மென்று பெயர். இதின் குணம் கால் கை நோயுடன் காய்ச்சல் இருக்கும். சுத்த பித்த நாடியில் வாததோஷத்தால் உண்டாகும் வியாதி கட்டிகள், பகந்தரம், இரணங்கள், முதலியன.

33. பித்த சிலேஷ்ம நாடி லக்ஷணம்:-



பித்த நாடியில் சிலேஷ்மம் கலந்திருந்தால் பித்த சிலேஷ்மமென்று நாடிகள் காட்டும். இதில் வாத நாடி மந்தமடைந்து பித்தநாடி சிலேஷ்ம நாடியை சேர்ந்து மூன்று நாடிகளும் வக்கிரித்தால் பித்த சிலேஷ்ம மென்று பெயுர்.

1. பித்தநாடி அதிதீவிரமாக ஓடினால் பித்த சீதள ஜுரமென்று பெயர்.

2. பித்தநாடி மந்தகதியடைந்தால் அந்தர்க்கத பித்த சீதள ஜுரமென்றும் சொல்லப்படும்.

3. மூன்று நாடிகளும் பேசிக்கொண்டிருந்து அடங்கி விட்டால் மிருத்துயு.


4. மூன்று நாடிகளும் கொஞ்சநேரம் தம்தம் ஸ்தானத்தில் நின்று பேசிக்கொண்டிருப்பது போலிருந்து, அதிசீக்கிரத்தில் அஸ்திவரையில் அடியிலிரங்கி மறுபடி அதி சூக்ஷ்மமாய் மேலுக்கு எழுதுவது தீர்க்கக்கூடிய வியாதி.

5. இந்த மூன்று நாடிகளும் தம்தம் ஸ்தானத்தை விட்டுப் பேசினால் வியாதி குறைவாகயிருப்ப தாய் காட்டி மிருத்துயுவுக்குக் காரணமாகும்.

6. வாதபித்த நாடிகள் சுவஸ்தானத்தில் பேசிக் கொண்டிருக்கும் காலத்தில், சிலேஷ்ம நாடி மட்டில் தம் ஸ்தானத்தைவிட்டு சதா தலையை அசைத்துக் கொண்டிருந்தால் அந்த ரோகிக்கு மிருத்துயு.

இதின் குணம்:- வயிற்று நோய், முதுகுவலி உண்டாகும், பேச்சுகள் மாறும்.

34. சுத்த பித்த (கேவல பித்த) நாடி லக்ஷணம்:-




பித்த நாடியில் பித்தம் கலந்திருந்தால் சுத்த பித்தநாடி என்று காட்டும். இதில்

வாத சிலேஷ்ம நாடிகள் மந்தகதியடைந்து பித்தநாடி வாத சிலேஷ்ம நாடிகளிடத்திற்கு ஓடிக்கொண்டும் மூன்றும் ஒரே கதியாய் நின்று வக்கிரதிலையயடைந்தும் பேசும்.

இதின் குணம்:- வீக்கத்தையும் சோர்வையும் மாற்றி மாற்றிக் காட்டும். சுத்த பித்தநாடியில் பித்த தோஷத்தால் பேதியும் வாந்தியும் உண்டாகும். வாதம் இரண்டு பாகமும் பித்தம் ஒரு பாகமும் இருந்தால் அதிக வயிற்றுவலி, மதரோகம் மூர்ச்சை இவைகள் உண்டாகும். பித்தம் இரண்டு பாகம் வாதம் ஒருபாகம் இருந்தால் எப்போதும் அதி உஷ்ணமாகவும் கண்கள் எரிச்சலாகவும் இருக்கும். வாதம் இரண்டு பாகமும் சிலேஷ்மம் ஒரு பாகமுமாக இருந்தால் எப்போதும் வயிற்றில் எரிச்சல் இருக்கும்.

35. சிலேஷ்ம வாத நாடி லக்ஷணம்:-



சிலேஷ்ம நாடி வாதநாடியில் பாய்ந்து பித்த நாடி மந்தகதியடைந்தும் மூன்று நாடிகளும் வக்கிரித்தும் பேசினால் சிலேஷ்ம வாயு என்று பெயர். சிலேஷ்ம நாடி மட்டில் தீவிரமாய் நடந்தால் சிலேஷ்மவாத ஜுரமென்று பெயர். சிலேஷ்மநாடி மந்தமாக நடந்தால் அந்த தர்க்கத சிலேஷ்மவாத ஜுரமென்று பெயர்.

இதின் குணம்:- நரம்புகள் வலிக்கும், முதுகில் நோயுண்டாகும்.

36. சிலேஷ்ம பித்தநாடி லக்ஷணம்:-



சிலேஷ்ம நாடி பித்தநாடியில் பாய்ந்து வாத நாடி மந்தகதியடைந்தும் வக்கிரகதி யாகப் பேசினால் சிலேஷ்ம பித்த மென்று பெயர். பித்தநாடி அதிவேகமாய் பேசினால் சிலேஷ்ம பித்த ஜுரமென்று பெயர். பித்தநாடி தக்ஷணம் மந்தகதி யடைந்தால் அந்தர்க்கத சிலேஷ்ம ஜுர மென்று சொல்லப்படும்.

இதின் குணம்:- வாய் கசக்கும், கண்டத்தில் கபம் கட்டியும் பேச்சு மாறியும் பேசும்.


37. சுத்த சிலேஷ்ம நாடி லக்ஷணம்:-



சிலேஷ்ம நாடி வாதபித்த நாடிகளுடன் ஒடிக் கொண்டும், தன ஸ்தானத்தில் ஸ்திரமாக நின்றும் மூன்றும் வக்கிரித் தும் பேசினால் அதற்கு சுத்த சிலேஷ்ம நாடி என்று பெயர். இந்த சிலேஷ்மநாடி உடனே தீவிர கதியடைந்தால் சுத்த சிலேஷ்ம ஜுரமென்று பெயர். சிலேஷ்ம நாடி மந்த கதியடைந்தால் அந்தர்க்கத சிலேஷ்ம ஜுரமென்று பெயர். சிலேஷ்ம நாடி வாதபித்த நாடிகளுடன் கலந்து தீவிரமாய் சக்கர கதியடைந்து மூன்று நாடிகளும் ஏகச் சக்கர கதியடையும் காலத்தில் வாதபித்த நாடிகள் மறைவாகி விடும், இதுவே மிருத்துயுநாடி இதை ஆசார்ய நாடி என்று சொல்வார்கள். இதுதான் பிராணப் பிரயாணகாலம்.

இதன் குணம்:- கண்விழி சுழலும், ஆத்துமா போய் விடும்.

38. ஸ்திரீ சம்போக நாடி:-




காலை வேளையில் வாதநாடி தன் ஸ்தானத்தில் சலித்துக் கொண்டும், பித்த நாடி அடங்கியும், சிலேஷ்ம நாடி தீவிரமாய் தலைகாட்டிக் கொண்டும் இருக்கும்.

39. ஸ்திரீகளுக்கு சூதக வாயு நாடி:-



வாத நாடி அடிக்கடி அதி வேகமாயும் பித்த நாடி சதா வேகமாயும் சிலேஷ்ம நாடி அடிக்கடி மந்தமாயும் இருந்தால் சூதக வாயு எனப்படும். இது பித்தவாயுவால் ஜனிக்கும். சிலேஷ்மநாடி நின்று நின்று மந்த கதியாகவும், வாத நாடி நின்று நின்று வேகமாகவும் பித்த நாடி நின்று நின்று அதிவேகமாகவும் நடக்கும். இது கர்ப்பிணிகளுக்கு சூதக வெட்டையால் மாதங்கள் நின்று நின்று பிண்டம் சிதலமாகும் நோயாளிகளுக்கு உள்ள நாடி.

40. கற்பநாடி:-



பித்த நாடி ஆழத்திலிருந்து சிறிது தலையெடுத்து அதி சூக்ஷ்மமாய் காட்டிக் கொண்டும் வாதநாடி வலிவுடன் தன்னிடத்தில் சுற்றிக்கொண்டிருக்கும் காலத்தில் சிலேஷ்மநாடி தன் ஸ்தானத்தில் சிறிது தலையெடுத்து ஆடிக்கொண்டிருக்கும்.


படத்தில் காட்டியது போல் பித்த நாடி அடியில் சக்ரகதியாக ஆடிக்கொண்டிருந்தால் கர்ப்பத்திலுள்ள பிண்டம் கரைந்து விடும். அதற்கு சிகிச்சை செய்தால் பிண்டம் உறுதியாய் சில பூர்ணாயுஸாகவும், சில அர்த்தாயுஸாகவும் இருக்கும். இப்படிப்பட்ட குழந்தைகளுக்குத் தாய்ப்பால் நிறுத்திவிட வேண்டும்.

41. ஜிஹ்றவ நாடி லக்ஷணம்:-




பித்த நாடி அடிக்கடி சுற்றிக் கொண்டும் தன் ஸ்தானத்தில் பல தரம் தலையை அசைத்துக் கொண்டும் கண்டத்தில் குதித்துக் கொண்டிருக்கும். அல்லது வாதநாடி அடிக்கடி இரு பக்கங்களிலும் ஆடிக்கொண்டும் தக்ஷணமே சமகதியடைந்தால் ஜிஹ்றவ தோஷநாடி என்று பெயர்.

42. ஹஸ்திஜுர நாடி லக்ஷணம்:-



வாதபித்த சிலேஷ்ம நாடிகள் ஆரம்பத்திலேயே தீவிரமாய் பலவித வக்கிரங்களாக நடந்தால் ஹஸ்தி சுரமென்று பெயர்.

43. அந்தர்க்கதஜுர நாடி லக்ஷணம்:-




மூன்று நாடிகளும் மந்தமாய் ஆடிக்கொண்டும் வக்ரமாய் சுற்றிக் கொண்டுமிருக்கும்.

44. ஹஸ்திகத ஜ்ர (முதுகெலும்பைப் பற்றிய) நாடிலக்ஷணம்:-




வாத பித்தநாடிகள் தம்தம் ஸ்தானத்தில் சுபாவமாய் பேசிக் கொண்டிருக்க சிலேஷ்ம நாடி மாத்திரம் அடிக்கடி மந்த கதியடைந்து வக்கிரித்துக் காட்டும்.

45. அசாத்திய நாடிலக்ஷணம்:-



மேற்கண்ட நெம். 42, 43, 44 ஜ்ர நாடி லக்ஷணங்களில் வாதநாடி பித்த நாடியில் குதித்துக் கலக்கவும் படத்தில் காட்டியது போல் பித்த நாடி விரிந்துகாட்டி அந்த பித்தநாடி சிலேஷ்மத்தில் குதிக்கவும் அந்த சிலேஷ்ம நாடி சக்கரம் போலவும் சுவாசக் போல் பித்த நாடியை வியாபிக்கும்.


46. விஷஸ்ங்கலித நாடி லக்ஷணம்:-



(சுகஜன்னி) ஸ்திரீகள் பஹிஷ்டி காலத்தில் சம்போகம் செய்வதாலும், கைல ஸ்நான காலத்தில் சம்போகம் செய்வதாலும் உபவாச காலத்தில் சம்போகம் செய்வதாலும், ஔஷத சேவை காலத்தில் சம்போகம் செய்வதாலும், விஷக் காற்று வீசும் காலத்தில் சம்போகம் செய்வதாலும், மனக்கவலையுள்ள காலத்தில் சம்போகம் செய்வதாலும் உண்டாகும் நாடி லக்ஷணம்)-

வாத பித்த சிலேஷ்ம நாடிகள் க்ஷண காலத்தில் சூக்ஷ்மத்தில் வக்கிரித்தும் சம கதியடைந்தும் க்ஷணாந்தத்தில் மந்தகதி யடைந்தும், உடனே தீவிர கதியும் அல்லது இந்த மூன்று நாடிகளும் அதிக மாய் ஒன்றின்பின் ஒன்று குதித்துக் கொண்டு வக்ரகதியாயும் சமக்தியாயும் மந்த கதியாயும் தீவிரகதியாயும் சுண்டு விரல் பக்கமாய் வக்கிரித்து தீவிரகதி யாயும், கட்டை விரல் பக்கம் சமகதி மந்த கதி சமமாய் ஓடுவது விஷமசங்தலித நாடியாகும்.

47. மிருத்திய நாடி லக்ஷணம்:-



வாதநாடி பித்தநாடி ஸ்தானத்திற்கும் இவ விரண்டும் சேர்ந்து கபநாடி ஸ்தானத் திற்கும் குதித்துக் கொண்டு மூன்று நாடி களும் சேர்ந்து ஒரே சக்கரகதியாக இருந் தால் மிருத்துயு, (மரணம்)

48. அஷ்ட ஸ்தான பரிக்ஷை:-

அஷ்ட ஸ்தானமாவது எட்டு இடங்கள்.

ஹஸ்தம- கைகள்

பாதம் - கால்கள்

கண்டம் - கழுத்து

நாசி - மூக்கு

மர்மஸ்தானம் - தொப்புளுக்குக் கீழ்ப்பாகம்

ரூபம் – தேஜஸ்

சப்தம் – குரலோசை

மலமூத்திரம் – பேதாபேதம்

1. ஹஸ்தம் – மணிக்கட்டுக்குக்கீழ் மூன்றங்குலத்தில் பார்த்துக் கொள்ளவும்

2. பாதம் – கால் மணிக்கட்டுக்கு மேல் மூன்றங் குலத்திற்குள்ளாக பார்த்துக் கொள்ளவும்

3. கண்டம் – கழுத்தின் இரு பக்கத்திலேயும் பார்க்கவும்

4. நாசி – மூக்கின் அடிபாகத்திலேயும் சுவாசத் தினாலும் பார்க்கவும்

5. மர்மஸ்தானம் – தொப்புளின் கீழ் நரம்புப் பிடிப்புகளால் தெரிந்துக்கொள்ளலாம்.

6. ரூபம் – முகத்தின் தேஜஸாலும் (பிரகாசம்) எந்தெந்த காலங்களில் எந்தெந்த இடங்களில் உஷ்ணமும் குளிர்ச்சியும் இருக்கவேண்டியதோ அதை கவனித்தும் பார்க்க வேண்டியது. முகம் அல்லது தேகத்தின் நிறம் வாதரோகமானால் கருத்தும், பித்தரோகமானால் மஞ்சளாகவும், சிவப்பாகவும், சிலேஷ்ம ரோகிக்கு வெண்மை யாகவும், துவந்த ரோகிக்கு அனேக வர்ணங் களாகவும், மனிதனுக்குள்ள சுயநிறத்தை மாற்றிக் காட்டுவது ஸன்னி பாதமென்றும் தெரிந்து கொள்ளவேண்டும்.

7. சப்தம் – குரலோசை நாபி ஹிருதயம், மூக்கு முதலிய இடங்களிலிருந்து உண்டாகும் சப்தத்தைக் கொண்டு தெரிந்து கொள்ளவும்.

நாபியிலிருந்துண்டாகும் சப்தத்திற்கு வாத ஸ்தானத்திலிருந்து வெளிப்படுகிறதென்றும் ஹிருதயத்திலிருந்துண்டாகும் சப்தத்திற்கு, பித்தஸ்தானத்திலிருந்து வெளிப்படுகிறதென்றும், நாசியிலிருந்துண்டாகும் சப்தத்திற்கு சிலேத்தும ஸ்தானத்திலிருந்துண்டாகிறதென்றும் தெரிந்து கொண்டு அந்தந்த ஸ்தான தோஷங்களை தெரிந்து கொள்ளவும்.

8. மலமூத்திரம் – உஷ்ணம், குளிமை, நிறம் முதலியவை கவனிக்கவும்.

வாத ரோகத்தில் மலம் பந்தித்து கருத்துப் போகும்.

பித்த ரோகத்திற்கு மஞ்சளாகவேனும் சிவப்பாகவேனும் போகும்.

சிலேஷ்ம ரோகத்திற்கு வெண்மையாகவும் பிசின் போலும் நுரை போலும் போகும்.

துவந்த ரோகத்தில் அனேக மிச்ரவர்ணங்களாகக் காணும்.

49. ஜீஹ்வ (நாக்கு) பரீக்ஷை

வாத ரோகிக்கு வெடிப்பாகவும் முள்ளு முள்ளாகவும் மஞ்சளாகவும் இருக்கும்.

பித்த ரோகிக்கு கறுப்பாகவும் உலர்ந்த நாக்காகவும் இருக்கும்.

சிலேத்தும ரோகிக்கு வெண்மையாகவும் ஈரத்துடனும் காட்டும்.

சன்னி பாதத்திற்கு ஈரமில்லாமலும் முள்ளு முள்ளாகவும் கறுப்பாகவும் இருக்கும்

துவந்த ரோகத்திற்கு ஒவ்வொரு சமயங்களில் ஒவ்வொரு நிறமாகக் காட்டும். ஒரே சமயத்தில் பல நிறங்களாகவும் காட்டும்.

50. நேத்திர பரீக்ஷை:-

கண்கள் கறுப்பாகவும் கொஞ்சம் வீக்கமாகவும் நீர் வந்து கொண்டிருந்தால் வாத ரோகமென்றும், மஞ்சளாகவும் சிவப் பாகவுமிருந்தால் பித்த ரோகமென்றும் பெயர். வெண்மையாய் அழுக்கு சேர்ந்து கொண்டிருந்தால் சிலேஷ்ம ரோகமென்றும் அறியவும், கண்கள் அதிக மஞ்சளாகவும், கால் கை நகங்கள் மஞ்சளாகவும் இருந்தால் துஷ்ட பித்தம் அல்லது காமாலை ரோகம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

நாடி ஞானபோதினி

இரண்டாம் பாகம்

கற்பனை

1. நாடியென்பதென்ன?

மானிட சரீரத்திலேயே பிறந்து உயிரை யுண்டாக்கி தேகத்திலேயே இடம் பெற்றுக் கொண்டு சர்வ அவயவங்களிலும் பாய்ந்து நாம் புசிக்கப்பட்ட உணவுகளின் சத்துக்களினால் அந்தந்த அங்கங்கட்கு ஏற்ற வலிவைக் கொடுத்து, ஏக நாடி மூலயமாக ஜீவ ஜீர்ண ஆயுள் கதிகளை வைத்தியர்கட்கு ஸகாயம் செய்கிறது.

2. வாத பித்த ஸ்லேஷ்மம் என்கிறது எந்த பாகத்திலிருக்கிறது ? அதின தன்மையென்ன?

மானிட சரீரத்தில் மலக் கோசத்தில் வாதமும், மூத்ர கோசத்தில் பித்தமும், இந்திரிய ஸ்தானத்தில் சிலேஷ்மமும், ஆக இடம் பெற்றுக் கொண்டு நாம் சாப்பிடும் உணவுகளுடைய சத்துக்களை அங்கங் கள் க்ரஹித்த பிறகு அதிலிருக்கும் முக்யமான சத்தை மேற்கூறிய மூன்று ஸ்தானங்களும் பெற்றுக் கொண்டு மலமூத்ர ஸ்தானங்களை ஸ்திரப்படுத்தி நம்மில் அடங்கியிருக்கும் வாயு சர்வாங்கங்களிலும் பாயச் செய்து இரத்தம் சுத்தமாக நின்று தூரிய

சந்திர சுஷும்னா நாடிகட்கு ஸகாயமாய் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்.

3. ஏக நாடி யென்பதென்ன?

வாத பித்த ஸ்லேஷ்மங்கள் மூன்றும் சரீரத்தில் பாய்ந்துக் கொண்டே ஸஹஸ்ர சக்ரத்தில் சம்பந்தப்பட்ட பிறகு ஒவ்வொரு நாடியிலும் வாதபித்த சிலேஷ்மங்கள் ஒன்றுக் கொன்று முன்பின்னாகப் பாய்வதால் வைத்யன் அந்த மூன்று கதிகளை அனுசரித்து சிகிச்சை செய்ய வேண்டும்.

எப்படியெனில்:-

1. மானவ சரீரத்தில் ஜீவநாடியென்கிற வாத நாடியால் நாம் புசிக்கப்பட்ட ஆகாரங்கள் ஜீர்ணிப்பதும் ஜீர்ணமாகாததும் மலத்தினால் கண்டறியலாம்.

2. ஜீர்ண நாடியென்கிற பித்த நாடியால் மூத்திரத்தினுடைய நிர்ணயங் கொண்டு ஜீர்ணமும் அஜீர்ணமும் கண்டறியலாம்.

3. ஆயுள் நாடியென்கிற சிலேஷ்ம நாடியால் இரத்தத்தினுடைய தன்மையைக் கண்டறியலாம்.

4. சப்தரச தாதுக்களென்றாலென்ன?

நாம் அடைந்திருக்கும் சப்த கோசங்களும் நாம் புசிக்கப்பட்ட ஆகாரங்களுடைய சத்தை சப்த நிறங்களாக மாற்றி அந்தந்த கோசங்கள் வலிவை அடைவதே சப்தரஸ தாதுக்களாம்.

5. ஸப்தரஸ தோஷமென்பதென்ன?

நாம் புசிக்கப்பட்ட ஆகாரங்களின் பேதா பேதங்களால் சப்த தாதுக்கள் க்ஷீணமடைந்து அந்தந்த கோசங்கள் (க்ஷீணமடைவதே) வலிவை இழப்பதே ஸப்தரஸ தோஷமாம்.

ஸப்த தாதுக்களுக்குத் தகுமான ஆகாரங்களைக் கண்டுபிடித்து புசிக்கச் செய்வதே சிரேஷ்டமானது.

6. நாடி ஸ்பர்ச கதிகளென்றாலென்ன?

மானிட சரீரத்தில் காணப்பட்ட வாதபித்த சிலேஷ்ம நிர்ணயங்கள் அதாவது காற்று, நெருப்பு ஜலம் இவைகளினுடைய வலிவுகளையும் ஒன்றுக்கொன்று ஒரே கதியாகயிருப்பதும் அல்லது ஏற்றக் குறைவாகயிருப்பதும் நரம்புகளில் இரத்தம் ஓடும் போது. தேகத்திலுள்ள அந்தந்த உள்ளுறுப்புகள் அடைந்திருக்கும் ஸ்திரவாத பித்த ஸ்லேஷ்ம தோஷா தோஷங்களைக் காண்பிப்பதே ஸ்பர்ச கதிகள் எனப்படும்.

மானவ சரீரத்தில் பாய்ந்திருக்கும் நாடிகள் ஓடும் படியான இரத்தத்தை தடையுண்டாக்க அப்படி பந்திக்கப்பட்டதை ஏகநாடி மூலமாய்க் கண்டு கொள்ளலாம்.

1. வாதநாடி

a. ஸர்ப்ப ஸ்பர்சமென்பது இரத்தம் காற்றோடு சம்பந்தப்பட்டு ஓடுங்காலத்தில் சர்ப்பநடையான ஜாடை காட்டும்.

b. காற்றோடு சம்பந்தப்பட்டு ஓடும்படியான இரத்தம் தடையடைந்து தண்ணீரில் குதிக்கும் மீனைப் போல் கொஞ்சம் கொஞ்சமாக வழியுண்டாக்கிக் கொண்டு பாயும். (இதை மீன் ஜாடையெனப்படும்)

c. காற்றோடு கலந்து ஓடும் இரத்தம் தங்கியிருந்த நீரினால் தடையடைந்து முன்பின்னாக துர்நீரை விழுங்கிக் கொண்டு நாடி தடிப்பான ஜாடைக்காட்டி சுத்தமான இரத்தத்தைப் பாயச் செய்யும். (இதையே அட்டை ஜாடையென்பார்கள்).

d. காற்றோடு கலந்து இரத்தம் ஓடுங்காலத்தில் பல்ஹீன கோசங்களிடத்தில் இப்புறமும் அப்புறமும் அலைந்துக் கொண்டு வழியையுண்டாக்கிக் கொண்டே ஓடுவது டோலா ஜாடையாம். மேற்கூறிய நான்கு ஸ்பர்சகதிகளும் வாத ஸ்திர நாடியில் சம்பந்தப்பட்டது.

2. பித்தநாடி

a. மானவனுடைய சரீரத்திலுள்ள அங்கங்களில் அடைந்த பித்தம் அதிதீவிரமாக இருந்த காலத்தில் ஓடும் இரத்தம் விரிந்துக்

கொண்டும் குதித்துக் கொண்டும் தவளை ஜாடை காட்டும்.

b. மானவனுடைய சரீரத்திலுள்ள அங்கங்களில் பித்தம் மந்தமடைந்தபோது இரத்தம் ஆவியைப் பிடித்து விரிந்துக் கொண்டு அலைந்தது போல் காகத்தின் ஜாடை காட்டும்.

c. மானவனுடைய சரீரத்திலுள்ள அங்கங்களில் அடங்கிய பித்தம் இரத்த ஓட்டத்தைத் தடையாக்கி அந்த இரத்தம் பாய்வதற்காக இருபுறமும் ஒடிக் கொண்டு தன்வலிவை இழந்து ஓடுவது (கிளி ஜாடையென்பார்கள்)

d. மானவனுடைய சரீரத்தில் ஹிருதய பாகத்தில் இரத்தத்தோடு சம்பந்தப்பட்டு பாயும் இரத்தத்தை விழுங்கி விட்டு நுரைக் குடல்களில் நீராய்ப் பாய்ந்து அதி வேகமாய்க் காற்றில் ஓடுவதைப் போலவும் ஏககாலத்தில் சரீர முழுமையும் ஆவியாக்கி சூக்ஷ்மத்தில் மானவனுடைய ஸ்மரணையை தவிர்த்து விட்டு மூத்திரம் முழுமையும் விசர்ஜனம் செய்து விட்டு மானவனுக்கு ஸ்மரணை வந்த பிறகு திடீரென்று வாத சிலேஷ்ம நாடிகளை அடக்கிவிட்டு உயிரைக் கொண்டு போகும் (இதையே மீன்குத்திப்பறவை ஜாடை என்பார்கள்)

மேற்கூறிய நான்கு ஸ்பர்சகதிகளும் பித்த ஸ்திர நாடியில் சம்பந்தப்பட்டது.

3. சிலேஷ்மநாடி

a. மானவன் சரீரத்தில் இரத்தம் ஓடுங்காலத்தில் ஹிருதய பாகத்தை அனுசரித்த மயில் நாடி பாயும் இரத்ததிலிருக்கப்பட்ட துஷ்ட நீரை இரு புறமும் அசைத்துக் கொண்டு சுத்தமான இரத்தத்தைப் பாயச் செய்யும் (இதன் ஜாடை நாடி ரூபத்தில் காண்க)

b. மானவன் சரீரத்தில் சுவாஸ கோசத்தை அனுசரித்த ஹம்ஸ நாடி நாம் சுவாஸிக்கும் காற்றிலுள்ள துர் ஆவியை விபாகம் செய்து சுத்த ஆகாயத்தினால் கோசங்கட்கு சகாயம் செய்துக்கொண்டிருக்கும். இதன் ஜாடை நாடி ரூபத்தில் காண்க.

c. மானவன் சரீரத்தில் மலகோசத்தில் கெஜ நாடி மலச்சிக்கலை நீராக்கிக் கொண்டு அதிசுலபமாய் மலவிசர்ஜனம் செய்யும். இதன் ஜாடை நாடிரூபத்தில் காணலாம்.

d. மானவன் சரீரத்தில் மூத்திர கோசத்தில் குக்கிட நாடி மூத்ரபிண்டம் வரையில் பாய்ந்து மூத்திரத்தைச் சுத்தி செய்துக் கொண்டு சுலபமாக விசர்ஜனம் செய்விக்கும் இதின் ஜாடை நாடி ரூபத்தில் காணலாம்.

மேற்கூறிய நான்கு ஸ்பர்ச கதிகளும் சிலேஷ்ம ஸ்திர நாடியில் சம்பந்தப்பட்டது இந்த நான்கு அம்சங்களையும் அந்திய காலத்தில் முக்கிய மாய்க் கவனிக்க வேண்டும். மேற்கூறிய வாத பித்த சிலேஷ்ம ஸபர்ச கதிகள் பனிரண்டு அம்சங்களும் நாடி நிர்ணயத்தில் மானவனுடைய பிராண வாயுவை அனுசரித்ததாயிருக்கும்.

N.B. மேற்சொன்ன ஸ்பர் சகதிகளை ஒரு வைத்யன் தன் சுத்த ஹிருதயத்தாலும் சூக்ஷ்ம புத்தியாலும் ஒரே நாடியில் காணப்பட்ட மூன்று நாடி ஸ்பர்சகதிகளின் மூல்யமாக அறிந்து வாத பித்த சிலேஷ்மங்களுக்கு தகுமான ஆகாரங்கள் கொடுக்கப் பிரயத்தனப்பட வேண்டும். அதாவது வாதம் குறைவாகவும் பித்தம் அதிகமாகவுமிருந் தால் வாதம் குறையாமலிருப்பதற்காக, வலிவுள்ள ஆகாரமும், பித்தம் குறைவாக இருந்து வாதம் அதிகமாக இருந்தால் சீக்கிரம் ஜீர்ணிக்கும் ஆகார மும், வாத பித்த நாடிகள் இரண்டும் ஸ்திரமாக இருந்து சிலேஷ்மம் அதிக்கிரமித்தால் அந்தசரீர தத்துவத்திற்க்குத் தகுமான ஜீவராசியின் இரத்தத் தைக் கொடுத்து அந்த சிலேஷ்ம நாடியை ஸ்திரப் படுத்திக் கொள்ளலாம். உடனே இரத்த விருத்தி யைத் தரும். ஆகாரங்களைக் கொடுத்து உயிரைக் காப்பாற்ற வேண்டும். வாதபித்த மிரண்டும் ஒன்றோடொன்று கலந்துக் கொள்வதாயிருந்தால் மலமூத்திரங்களை விசர்ஜனம் செய்விக்கப் பிரயத் தனப் படவேண்டும்.

வாதபித்த சிலேஷ்மமென்கிற ஸ்திர நாடிகள் சரீரத்தில் ஓடும் இரத்தத்திலுள்ள தோஷா தோஷங் களை அனுசரிக்காவிட்டால் கீழ்க்கண்ட ஸபர்ச கதிகளைக் காட்டும்.

4. நாடிகளுக்கு ஒற்றுமையில்லாவிட்டால் ஆடும் ஜாடை காட்டும்.

5. நாடிகள் ஒன்றுக்கொன்று துவேஷமடைந் தால் பார்க்கும் or கலக்கும் or பேசும் ஜாடை காட்டும்.

6. நாடிகள் ஒரு நாடிக்கொரு நாடி வலிவு குறைந்து விட்டால் குதிக்கும் or கலக்கும் ஜாடை காட்டும்.

7. ஒருநாடிக்கொரு நாடி ஸ்நேஹம் செய் வதால் பாயும் ஜாடை காட்டும்.

8. ஒருநாடிக்கொரு நாடி பேதமில்லாமல் ஸ்திரமாயிருந்தால் (நிரோகி) ஸ்திரமான ஜாடை காட்டும்.

9. மூன்று நாடிகளும் ஒன்றுக்கொன்று கலந்துக் கொள்வதானால் திரிதோஷ ஜாடைக் காட்டும்.

10. இந்திரியம் க்ஷீணமடைந்தால் கோண லாகச் சுற்றும் ஜாடை காட்டும்.

11. நாடிகள் பலஹீனமடைந்திருந்தால் வக்கி ரிக்கும் ஜாடை காட்டும்.

12. நாடிகட்குமேல் துஷ்ட இரத்தம் பாய்ந்தால் பற்க்கும் Or மேலோடும் ஜாடை காட்டும்.

13. நாடிகள் வலிவை அடைந்தால் இரு பக்கத்திலும் ஓடும் ஜாடை காட்டும்.

14. இரத்தம் அதிதீவிர ஓட்டமாகயிருந்தால் குதித்து அடங்கும் ஜாடை காட்டும்.

15. நாடிகள் ஒவ்வோரிடத்திலும் பலஹீனமடைந்திருந்தால் ஓடும் இரத்தம் நின்று நின்று பாயும் ஜாடை காட்டும்.

16. கோசங்களிடத்தில் கலந்திருக்கும் நாடிக்கு இரத்தம் ஓடுவதற்கு வழியில்லா விட்டால் குதித்துக் கலக்கும் ஜாடை காட்டும்.

17. நாடிகள் தோஷமடைந்து இரத்தமும் தோஷமடைந்து பாய்ந்தால் ஒன்றுக்கொன்று சக்ர கதியாய்க் கலந்து கொள்ளும் ஜாடை காட்டும்.

18. நாடியில் ஓடும் இரத்தம் அதிக பித்த மடைந்திருந்தால் கடினமும் கம்பீரமும் ப்ரகாஸமுமான ஜாடை காட்டும்.

19. சூரிய கிரணத்தின் உஷ்ணத்தால் மாறுதலடைந்த வாயுவை சுவாசிப்பதால் ஹிருதயத்தில் இரத்தம் பித்த சமபந்தப்பட்டு பித்தம் அதிகிரமித்து நாடி தீவிர ஜாடை காட்டும்.

20. நாடிகள், சரீரத்திலுள்ள மூலஸ்தானங்களில் வலிவு குறைவடைந்திருந்தால் தன்னிடத்தில் குதிக்கும் ஜாடை காட்டும்.

21. காற்றுப் பைகள் பலஹீனமடைந்திருந்தால் காற்றில் ஓடும்போலும் பாய்ந்து மறையும் போலும் ஜாடை காட்டும்.

22. நாடி பலஹீனமடைந்து அதிவேகமாய் இரத்தம் பாயும் பக்ஷத்தில் சலிக்கும் or தலை ஆட்டும் ஜாடை காட்டும்.

23. பிராண் அந்திய காலமாயிருந்தால் நாடி தன்னிடத்தை விட்டு மாறும் ஜாடை காட்டும்.

24. நாடி ஆவியை யடைந்திருந்தால் சக்ரம் போல் சுழலும் ஜடை காட்டும்.

25. மலக்கோசத்தில் மலம் தோஷமடைந்தால் விசாலிக் குஞ்சாடையாகவும் மலமில்லா விட்டால். (அந்தர்க்கதம்) அடியில் விழுந்துவிட்டது போன்ற ஜாடை காட்டும்.

26. புருஷாளுக்கு தொப்புளிலும் ஸ்திரீகட்கு சூதிகத்திலும் புண்ணாயிருந்தால் கற்ப ரணம் போன்ற ஜாடை காட்டும்.

27. பிராணம் வெளிப்படுங் காலத்தில் சரீரத்தில் உஷ்ணம் அதிகரித்து முழுவதும் அடங்குவதால் மின்னலைப் போல் சலிப்பதுபோலும் சுவாச பந்தன முண்டாக்குவது போன்ற ஜாடை காட்டும்.

மேற்கூறிய 4—வது நெம்பர் முதல் 27—வது நெம்பர் வரையிலுள்ள 24 ஸ்பர்சகதிகளும் ஒடும் இரத்தத்தில் வாதமும், பித்தமும், சிலேஷ்மமும் ஒரே வலிவை அடைந்து பாய்வதும் அல்லது அவைகள் பேதிப்பதும் அந்த இரத்தம் உள்ளுறுப்புகட்கு நன்மை செய்வதும் அல்லது க்ஷீணத்தைக் கொடுப்பதும் இந்த ஸ்பர்சகதிகளின் ஜாடைகளால் நாடிகள் மூல்யமாக புத்திசாலியான வைத்தியர் தெரிந்துக்கொண்டு நோயாளியின் ஆபத்தைத் தீர்ப்பதும் ஸ்ரீமந் நாராயணன் சாக்ஷியாக நடந்து மிருத்யுவை தன் மூல்யமாய் நடக்க ஒட்டாமல் தப்பித்துக்கொண்டு தூரத்தில் விலகிவிட வேண்டும்.

இந்த கற்பனையென்னும் நாடி ஞான போதினி இரண்டாம் பாகத்தில் மற்றவிஷயங் களும் பிரபலமாகக் காண்பித்து புத்தக மூலியமாக வெளியிடப்படும்.

தாமரை

நூலகம்